சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு நிதியுதவி பெறும் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புதல் – அரசு மான்ய நல்கை விதி தொகுப்பு (Grant in Aid Code) உறுப்பு எண்.11–ல் குறிப்பிட்டுள்ள பணியாளர் தேர்வு (Selection of Staff) குறித்த விதிக்கு திருத்தம் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (சி1) துறை

அரசாணை (நிலை) எண்.303

நாள்: 12.12.2018
விளம்பி வருடம், கார்த்திகை – 26,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.1282, கல்வித் துறை, நாள் 26.7.1967.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.46108/சி1/ 2017, நாள் 2.1.2018, 11.6.2018 மற்றும் 18.9.2018.

------

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசு உதவி பெறும் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கென அரசு மான்ய நல்கை விதி தொகுப்பு (Grant-in-aid Code) வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதங்களில், அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் 34 அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் பணியாளர்கள் பதவி உயர்வு வழங்கக் கோரி நீதிமன்ற வழக்குகள் தொடர்வதை தவிர்க்கும் பொருட்டும், இதனால் ஏற்படும் நிர்வாக சிக்கல் மற்றும் கால விரயங்கள் ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டும், பணியாளர்களின் நலன் மற்றும் நிர்வாகத்தின் நலன் கருதியும், அனைத்து அரசு நிதியுதவிபெறும், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் (Government Aided Engineering and Polytechnic Colleges) நுழைவு பணியிடங்களை 100% நேரடி நியமனங்கள் வாயிலாகவும், மற்ற அனைத்து பதவி உயர்வு பணியிடங்களையும் (Promotional Post), அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் (Government Engineering and Polytechnic Colleges) பதவி உயர்வு வழங்குவதற்கு கடைப்பிடிக்கப்படும் அரசின் விதிமுறைகளை பின்பற்றி, பதவி உயர்வு வாயிலாக நிரப்புவதற்கு ஏதுவாக, பதவி உயர்வு வாயிலாக நிரப்பப்படும் பதவிக்கு தகுதியுள்ள மற்றும் பொருத்தமான உள்நபர்கள் எவரும் பயிலகத்தில் இல்லை என்ற நிலையில் மட்டும், அப்பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்ப இயக்குநரின் முன்னனுமதி பெற்று, ஏற்கனவே பின்பற்றப்படும் நடைமுறைகளை பின்பற்றி நிரப்பிடவும், அரசு மான்ய நல்கை விதி தொகுப்பு (Grant-in-aid Code) உறுப்பு எண் 11–ல் குறிப்பிட்டுள்ள பணியாளர் தேர்வு (Selection of staffs) குறித்த விதிக்கு மட்டும் அவசரமாக திருத்தம் செய்வதற்குரிய கட்டாய சூழ்நிலை எழுந்துள்ளது என்பதால், இப்பொருளுக்கு மட்டும் விரைவில் திருத்தம் அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டிருந்தார்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அனைத்து அரசு நிதியுதவிபெறும் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் (Government Aided Engineering and Polytechnic Colleges) நுழைவு பணியிடங்களை 100% நேரடி நியமனங்கள் வாயிலாக நிரப்பிடவும், மற்ற அனைத்து பதவி உயர்வு பணியிடங்களையும் (Promotional Post), அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு

பாலிடெக்னிக் கல்லூரிகளில் (Government Engineering and Polytechnic Colleges) பதவி உயர்வு வழங்குவதற்கு கடைப்பிடிக்கப்படும் அரசின் விதிமுறைகளை பின்பற்றி, பதவி உயர்வு வாயிலாக நிரப்புவதற்கு ஏதுவாக பதவி உயர்வு வாயிலாக நிரப்பப்படும் பதவிக்கு தகுதியுள்ள மற்றும் பொருத்தமான உள்நபர்கள் எவரும் பயிலகத்தில் இல்லை என்ற நிலையில் மட்டும், அப்பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்ப இயக்குநரின் முன்னனுமதி பெற்று, ஏற்கனவே பின்பற்றப்படும் நடைமுறைகளை பின்பற்றி நிரப்பிட ஏதுவாக, அரசு மான்ய நல்கை விதி தொகுப்பு (Grant in Aid Code) உறுப்பு எண் 11–க்குப் பதிலாக கீழ்க்காணும் உறுப்பு பதிலீடு செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:–

**11. Selection of Staff:**

(i) Appointments to entry level posts in teaching, non-teaching, ministerial and basic staff category for the Institution shall be made by direct recruitment by a Selection Committee [constituted in accordance with the general orders of the Government / Director from time to time] by calling for applications from qualified candidates through the Newspaper advertisement and by calling for a list of candidates from the Employment Exchange, by following the rule of reservation ordered by the Government, from time to time as per roster.

(ii) Promotions in a service or class to a selection category or to a selection grade shall be made on grounds of merit and ability, seniority, being considered only where merit and ability are approximately equal.

(iii) The Governing Council shall fill up the posts by promotion for promotional posts. The Governing Council shall, while making promotion, consider the claims of all the qualified persons in that Institution. If, however, no qualified persons are available, the vacancy shall be filled up by direct recruitment through Staff Selection Committee, by calling for applications from qualified candidates through Newspaper Advertisement and by calling for a list of candidates from the Employment Exchange, by following the rule of reservation ordered by the Government, from time to time, after getting prior permission from the Director.

( ஆளுநரின் ஆணைப்படி )

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
முதல்வர்கள், அனைத்து அரசு உதவி பெறும் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள்,
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை–15.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர்கள் / மாவட்ட கருவூல அலுவலர்கள்.
உள்ளுறை கணக்கு அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை–9.

நகல்:-
சட்டத் துறை, சென்னை–9.
நிதித் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர் 13/12/18